திட்டத்தில் யோசிக்கலாம். தனி அதிகாரிகள் போடுவது என்பதெல்லாம் இப்பொழுது நிதி இலாகாவிலும், பொதுத் துறையிலும் ஆலோசனையில் இருக்கிறது.

*Garden opposite to Legislators' Hostel*

* 143 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the amount spent for reclaiming the garden and for installing sprinkler irrigation opposite to the multi-stroyed M.L.A.'s House ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கான பல அடுக்கு விடுதிக்கு எதிரிலுள்ள தோட்டத்தைப் பண்படுத்துவதற்காக செலவிடப்பட்டத் தொகை ரூ. 6,968.50 ஆகும் (ரூபாய் ஆறுயிரத்து தொளாயிரத்து அறுபத்தெட்டும் ஐம்பது பைசாவும்). தெளிப்பு முறையில் தண்ணீர் பாய்ச்சுவதற்கான சாதனங்கள் கட்புல விளக்கத்திற்காக ஒரு நிறுவனத்தால் அமைக்கப் பட்டு, அந்நிறுவனம் அச்சாதனத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டுள்ளது. எனவே, இதற்காக எத்தொகையும் செலவு செய்யப் படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் தோட்டம் இப்பொழுது தோட்டமாக இருக்கிறதா அல்லது பொட்டலாக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் தோட்டத்திலிருந்து அரசாங்கத்திற்கு அல்லது இலாகாவிற்கு வருவாய் ஏதாவது வருகிறதா? அல்லது நட்டம் ஏற்பட்டிருக் கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டமே சென்னை நகருக்கும், சுற்று வட்டாரங்களுக்கும் காய்கறிகளை உற்பத்தி செய்து குறைந்த விலையில் கொடுக்கவேண்டும் என்றுதான் ஆரம்பிக்கப்பட்டது. முன்னோடித் திட்டமாக அமைக் கப்பட்டது. சட்டமன்ற விடுதிக்கு முன்னால் இருக்கும் 26 ஏக்கர் நிலத்தில், 1968–69-ல், இதில் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லாபமா, நஷ்டமா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : லாபமும் இல்லை, நட்டமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதோடு முடிந்தது.

திரு. எ. சுவாமிதாஸ் : முன்னோடித் திட்டம் என்றார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள், இதைப் பார்த்துவிட்டு இந்த வகையிலேயே விவசாயத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1971 ஜூலை 6]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதைச் சீர்படுத்த உறுப்பினர்கள் முன் வந்தால் பாராட்டுவேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, குழாய் மூலமாகத் தண்ணீர் தெளித்து விவசாயம் செய்தார்களே, அந்த விவசாயத் திணல் ஏதாவது பலன் ஏற்பட்டதா? பல மாவட்டங்களில் அந்த முறையைக் கையாளுவதற்காக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தண்ணீரை வீணுக்காமல் குறைந்த அளவில் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தோடு அந்த முறை பயன்படுத்தப்பட்டது. ஆனல் அந்தத் தோட்டத்தில் பயன்படுத்தும்போது அந்த நீர் உப்பு நீராக இருந்த காரணத்தால் சரியாக இயங்கவில்லை. தனியார் துறையில் ஒருவர் வைத்து ஒரு "மாதிரியாகக்" காட்டினர். அது சரியாக இருந்து, நல்ல முறையில் வேலை செய்தால், அம்மாதிரி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகளுக்குரிய காலத்தை நீட்டிக்க பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

*State Express buses*

*114 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state whether the number of seats in State Transport Express buses has been increased from 35 to 49?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

Dr. H. V. HANDE : Sir, is it not a fact that by increasing the number of seats, the inconvenience caused to each passenger has been increased and consequently the very purpose of providing more seats has been negatived for the reason that the people have stopped using it as liberally as they wanted to. Also, because of this inconvenience, it is better that the Government reconsider the whole thing and see that more confortable seats are given and wring the nomber of seats back to 35.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதிகம் பேர் பயணம் செய்வதற்காக வேண்டி, அந்த வசதியையும் உத்தேசித்துத்தான் இந்த இடங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே இட நெருக்கடி இருக்கிறது என்று சிலரிடத்திலிருந்து புகார் வந்ததையொட்டி, 49 இடங்களிலிருந்து—முன்பு ஒருவருக்கு 29 அங்குலம் வசதிகளோடு ஏற்கெனவே கொடுத்திருந்தார்கள். அதை இப்போது 32 அங்குலம் என்ற அளவில் வசதிகளோடு 45 இடங்கள் உள்ள அளவுக்கு நல்ல வசதிகளோடு கூடிய பேருந்துகளாக அமைக்க திட்டம் ஒன்று அரசின் பரிசிலனையில் இருக்கிறது.